Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234
சட்டமன்ற தொகுதிகளுக்கும்
செய்தி – விளம்பரம்
சேகரிக்க முழு நேர – பகுதி நேர
பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125

**செய்தியாளர்கள் தேவை**

தமிழகம் முழுவதும்
மாவட்டம் & தாலுகா
வாரியாக சந்தாதாரர்
அடிப்படையில்
ஆண்/பெண்
நிருபர்கள் தேவை

☎ 94440 82959

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., **DHINATH DHALAM** Tamil & English daily Paper ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 111 | சனிக்கிழமை Saturday | 21.02.2026 | பக்கங்கள் Pages:4 | ₹6 | ஈரோடு Erode

# மக்கள் ஆதரவுடன் மீண்டும் திமுக 2.0 ஆட்சி அமையும்

## சட்டப்பேரவையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேச்சு



சட்டப்பேரவையில் இடைக்கால நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்திற்கு பதிலுரை நடைபெற்று வருகிறது.அப்போது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உரையாற்றினார். கடந்த 24.1.2026 அன்று பேரவையில், குறிப்பிட்டதை இப்பொழுது நினைவு கூறுகிறேன். 2021 ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆறாவது முறையாக வெற்றி பெற்ற போது ஒரு பக்கம் மகிழ்ச்சி இருந்தாலும், இன்னொரு பக்கம் எனக்கு கவலை இருந்தது. அதை நான் மறைக்க விரும்பவில்லை. இந்த பொறுப்பை நான் எப்படி செய்யப் போகிறேன். வாக்குறுதிகளை நிறைவேற்றமுடியுமா?மக்கள் விரும்பக்கூடிய வகையில் ஆட்சி நடத்த முடியுமா? மக்கள் மகிழ்ச்சி அடையும் வகையில் ஆட்சி நடத்த முடியுமா? என்ற கவலை தான் எனக்கு இருந்தது என்று நான் சொல்லியிருப்பேன். முந்தைய அரசுகளின் செயல்பாட்டின் காரணமாக, விளைந்த மிக மோசமான பின்னடைவு நமக்கு ஒத்துழைக்காத ஓரவஞ்சனை செய்யக்கூடிய ஒன்றிய அரசு.

இரண்டுக்கும் இடையில் தான் நாம் இருந்தோம். நமக்கு பெரும் வெற்றியை தந்து, பொறுப்பை ஒப்படைத்த மக்களை எதிர்பார்ப்புகிடையில் ஆட்சிக்கு வந்தோம். தமிழ்நாட்டில் அனைத்து துறைகளும் எப்போது வளரும் என்ற ஏக்கத்தில் இருந்தவருடைய வருதத்தைபோக்கி, சமச்சீரான வளர்ச்சியை இந்த ஐந்து ஆண்டுகளில் அடைந்திருக்கிறோம். திராவிட மாடல் அரசு தீட்டிய திட்டங்களை ஏத்திய சட்டங்களை மக்களின் வைத்துள்ளோம். நிதி நிலைமை சீராக இல்லாத நேரத்தில், அதனை காரணமாக சொல்லி சும்மா இருக்காமல் நிறைய திட்டங்களை செயல்படுத்தி இருக்கிறோம்.

திராவிட அரசால் இந்த ஐந்து ஆண்டுகளில் விடியல் பயணம், கலைஞர் மகளிர் உரிமை திட்டம்,நான் முதல்வன் திட்டம், காலை உணவு திட்டம், புதுமைப்பெண் திட்டம் ,அரசு ஊழியர்களுக்கான உறுதி அளிக்கப்பட்ட ஓய்வுகைதிட்டம் ,இன்னுயிர் காப்போம் ,நம்மை காக்கு 48 4,000 மேற்பட்ட திருக்கோயில்களை குடமுழுக்கு, குழந்தைகள் முதல் முதியோர் வரை ஆரம்பகள்ளி முதல் ஆராய்ச்சி கல்வி வரை, இளைஞர்கள் ,பெண்கள், விவசாயிகள் ,நெசவாளர்கள் ,விளிம்பு நிலையில் இருந்த ஆதிதிராவிட பழங்குடியின மக்கள் பிற்படுத்தப்பட்ட மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள், மாற்றுத்திறனாளிகள் என அனைத்து சமுதாயத்தினரும் வாழ்வில் உயர்வு கண்டிட எண்ணற்ற திட்டங்கள் செயல்பட்டது.

இதற்கெல்லாம் நான் மட்டுமா காரணம் இல்லை .ஒட்டுமொத்த தமிழர்களும் என் கையோடு கை சேர்ந்து எனக்கு ஆக்கத்தையும், தூக்கத்தையும், வழங்கி பல்வேறு நலத்திட்டங்களை நடைமுறைப்படுத்தக் கூடிய வாய்ப்பையும், வலிமையும் தந்தை எனக்கு உதவினார்கள்,நான் இந்த ஐந்தாண்டு காலத்தில் எனக்கும் என் மனசாட்சிக்கு மட்டுமே கட்டுப்பட்டு வைத்திருக்கிறேன், இன்னும் உழைக்க காத்திருக்கிறேன், நாளைய தமிழ்நாடு நிச்சயம் நெஞ்சில் தாங்கி, நம்மை வரவேற்க நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

நாளை நாங்கள் அமைக்க போகின்ற திராவிடம் 2.0 ஆட்சி எங்கள் சாதனைகளை நாங்களே பிஞ்சு அளவிற்கு திராவிட முன்னேற்றக் கழகம் என்ற திராவிட முன்னேற்றகழகம் என்ற மாபெரும் இயக்கத் தலைவராக அமர வைத்து தான். தமிழ்நாட்டின் முதலமைச்சராக உழைத்த லட்சக்கணக்கான உடன் பிறப்பு திசை நோக்கி இருந்தால் அவர்களை நினைத்துக் கொண்டு அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். உறுதியாக சொல்லுகிறேன் மீண்டும் வெல்வோம் மீண்டும் ஆட்சி வந்த அமைப்போம் மீண்டும் வந்து தமிழ் மக்களுக்கான திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்துவோம் என்று கூறினார்.

# கே.என்.நேருவை அமைச்சர் பதவியில் இருந்து நீக்க வேண்டும்

## த.வெ.க. தலைவர் விஜய் வலியுறுத்தல்



K.N.நேருவை அமைச்சர் பதவியில் இருந்து நீக்க வேண்டும் என தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் தெரிவித்து உள்ளார். கபட நாடகத் தி.மு.க. அரசின் நகராட்சித் துறை அமைச்சரின் ரூ.1020 கோடி ஊழலை அமலாக்கத்துறைஎப்போதோ வெளிக்கொண்டுவந்தது அப்போதே சம்பந்தப்பட்ட அமைச்சர் மீது வழக்கு தொடுக்கவும் சொன்னது என்றும், ஆனால், ஊழலின் ஊற்றுக்கண்ணை விசால ப்படுத்திக்கொண்டே செல்வதில் இந்த வெற்று விளம்பர மாடல் தி.மு.க. அரசு கைதேர்ந்தது எனவும் தெரிவித்தார்.

ஆகவே, அமலாக்கத் துறை தந்த ஊழலுக்கான ஆதாரங்களைக் கண்டுகொள்ளவே இல்லை என்றும் குற்றம்சாட்டினார். 2026 தேர்தலில் வெல்லவே முடியாது என்று தெரிந்தும் தேர்தலுக்காக ஏதாவது தில்லுமுல்லுகளையும் கூட்டணிக்காகத் தகிடுதத்தங்களையும் தாராளமாகவும் ஏராளமாகவும் செய்வதில் மட்டுமே முனைப்பாக இருக்கும் தி.மு.க. அரசின் உச்சியைப் பிடித்து உயர்நீதிமன்றம் உலுக்கி இருப்பதாக விஜய் தெரிவித்து உள்ளார். நகராட்சித் துறை அமைச்சரின் ஊழல் குறித்து அமலாக்கத் துறையின் குற்றச்சாட்டு களுக்காகத் தந்துள்ள ஆதாரங்களில் முகாந்திரம் உள்ளது., உடனடியாகஅவர் மீது வழக்குப் பதிவு செய்ய வேண்டும் எனத் தமிழக அரசுக்கு உத்தரவிட்டுள்ளது என்று கூறினார். ஊழல் மலிந்த மு.க.ஸ்டாலின் அரசுக்கு நேர்ந்து வரும் துடைக்கவே முடியாத ஆகப் பெரிய அவமானங்களில் இதுவும் ஒன்று என்றும் இதுவரை தனது அரசின் ஊழல்களுக்குப் பரிகாரமே தேடாத தி.மு.க. அரசு, ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகி உள்ள நகராட்சித் துறை அமைச்சரைத் தானாகவே ராஜினாமா செய்யச்சொல்லவேண்டும் என்றும் இல்லையேல்அவரைப்பதவி நீக்கம் செய்ய வேண்டும் எனவும் வலியுறுத்தி உள்ளார். மன்னிக்க முடியாத அளவிற்கு ஊழல் மலிந்த தி.மு.க. அரசை, வருகிற தேர்தலில் தூக்கி எறிந்து விசிலடித்துக் கொண்டாட மக்கள் காத்திருக்கின்றனர் என்றார்.

# “மீண்டும் திமுக ஆட்சிக்கு வாய்ப்பு” முதலமைச்சர் ஸ்டாலினை சந்தித்த ஓபிஎஸ் கருத்து



சென்னை: "மீண்டும் ஆட்சிக்கு வரக்கூடிய வாய்ப்பு திமுகவுக்கு இருக்கிறது" என முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.


அதிமுக தொண்டர்கள் உரிமை மீட்புக் கழகத்தின் தலைவர் ஓ.பன்னீர்செல்வம் இன்று தமிழக சட்டப்பேரவை வளாகத்தில் முதல்வர் ஸ்டாலினை சந்தித்துப் பேசியது அரசியல் வட்டாரத்தில் பல்வேறு சந்தேகங்களை கிளப்பியுள்ளது. இந்தச் சந்திப்புக்குப் பின் செய்தியாளர்களிடம் ஓ.பன்னீ ர்செல்வம் கூறும்போது, "ஐந்தாண்டு கால திமுக ஆட்சி சிறப்பாக நிறைவு பெற்றிருக்கிறது. அதனால் முதல்வரை சந்தித்து வாழ்த்து தெரிவித்தேன்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

அப்போது உசிலம்பட்டி தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் ஐயப்பன், முதல்வர் ஸ்டாலினுக்கு ஆதரவாக சட்டப்பேரவையில்பேசியது குறித்து செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு அவர், "தமிழக மக்கள் என்ன நினைத்துக் கொண்டு இருக்கிறார்களோ, அதை அவர் சொல்லியிருக்கிறார்" என்று கூறினார். பின்னர் அவர், "அதுபொதுவானகருத்து, இன்றைக்கு இருக்கும் அரசியல் சூழ்நிலை, கடந்த 5 ஆண்டு கால ஆட்சியின் நிலை, திமுக செய்த சாதனைகள் மக்கள் மனதில் ஆழமாக பதிந்திருக்கிறது. மீண்டும் ஆட்சிக்கு வரக்கூடிய வாய்ப்பு திமுகவுக்கு இருக்கிறது. தமிழகத்துக்கே வழி பிறந்திருக்கிறது" என்றும் ஓபிஎஸ் கூறினார்.

அதிமுக தொண்டர் உரிமை மீட்பு குழு என்ற ஒரு இயக்கத்தை தொடங்கி நடத்தி வரும் ஓ.பன்னீர்செல்வம், சட்டப் பேரவை தேர்தலில் தனது நிலைப்பாட்டை இன்னும் தெரிவிக்காமல் இருந்து வருகிறார். இந்நிலையில், முதலமைச்சர் ஸ்டாலினை சந்தித்திருப்பது அவர் திமுகவில் இணைவதற்கான முயற்சியா? என்ற கேள்வியை எழுப்பியுள்ளது.

ஓபிஎஸ் அணியில் இருந்த அவரது ஆதரவாளர்கள் ஒருவர் பின் ஒருவராக திமுகவில் இணைந்து வரும் நிலையில், இந்த சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. இந்த சந்திப்பு அரசியல்ரீதியானதா? மரியாதை நிமித்தமானதா? என்பது அடுத்து வரும் சில நாட்களில் தெரியவரும்.

# வங்கக்கடலில் மேலும் ஒரு புதிய புயல் சின்னம்: வரும் 22ம் தேதி 3 மாவட்டங்களில் மழை



தென் கிழக்கு வங்கக்கடலில் அடுத்த 48 மணி நேரத்தில் காற்றழுத்தத் தாழ்வுப்பகுதி உருவாக வாய்ப்புள்ளது.

(19-02-2026) பூமத்தியரேகைக்கு அருகிலுள்ள இந்தியப் பெருங்கடல் மற்றும் அதனை ஒட்டிய தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவிய காற்றழுத்த தாழ்வுப்பகுதி, (20-02-2026) காலை 08.30 மணி அளவில் வலுவிழந்தது.

பூமத்தியரேகைக்கு அருகிலுள்ள இந்தியப் பெருங்கடல் பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இதன் காரணமாக, மற்றொரு காற்றழுத்த தாழ்வுப்பகுதி அதே பகுதிகளில்அடுத்த48மணி நேரத்தில் உருவாகக்கூடும்.

தென் தமிழகம் மற்றும் தெற்கு கேரள பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இதன் காரணமாக, தென் தமிழகம் மற்றும் மேற்குதொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில், லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

வடகடலோரதமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில், லேசான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகத்தில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

பிப். 22ல் தென் தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், வட தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

ஓரிரு இடங்களில் பலத்தகாற்று மணிக்கு 30 முதல் 40 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும். திண்டுக்கல், மதுரை மற்றும் தேனி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும்.

பிப். 23 முதல் 26 வரை தென் தமிழகம் மற்றும் மேற்குதொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில், லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். இதர தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும்.

பிப்.23மன்னார்வளைகுடா அதனை ஒட்டிய தென்தமிழககடலோரப்பகுதிகள் மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 60 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும். இந்தப் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்லவேண்டாமென்று அறிவுறுத்தப் படுகிறார்கள்.

**செய்திகள்**

**உடனுக்குடன் படிக்க**

தினத்தளம்

DHINATH DHALAM

**வாட்ஸ் அப் குரூப்பில்**

**இணையுங்கள்**

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

## தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில்
# விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் க.இளம்பகவத் தலைமையில் நடைபெற்றது

கூட்டத்தில் ஆட்சியர் தெரிவிக்கையில்,"வடகிழக்கு பருவமழை காலத்தில் இயல்பான அளவான 429.40 மி.மீ-க்கு பதிலாக 475.45 மி.மீ மழை பதிவாகியுள்ளது. இருப்பினும், ஜனவரி 2026-ல் இயல்பை விட மிகக் குறைவாக (2.06 மி.மீ) மழை பெய்துள்ளது.



அணைகளின் நிலை (18.02.2026 அன்று): பாபநாசம் அணை 90.55 அடியும், மணிமுத்தாறு 94.68 அடியும், சேர்வலாறு 83.63 அடியும் நீர் இருப்பு கொண்டுள்ளன.

வேளாண் சாகுபடி: 2025-26 ஆம் ஆண்டில் நெல் 14,412 ஹெக்டேர் பரப்பிலும், சிறுதானியங்கள் 93,058 ஹெக்டேர் பரப்பிலும் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. சிறுதானியங்கள் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை (79,345 ஹெக்) விட அதிக அளவில் பயிரிடப்பட்டுள்ளன. நெல் கொள்முதல்: சேரகுளம் மற்றும் தோழப்பன்பண்ணை ஆகிய கிராமங்களில் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பயிர் காப்பீடு: 2025-26 ஆம் ஆண்டில் உளுந்து, மக்காச்சோளம் உள்ளிட்ட பயிர்களுக்காக 88,988 விவசாயிகள் காப்பீடு செய்துள்ளனர். சேமா காப்பீடு நிறுவனம் மூலம் சுமார் ரூ.37.06 கோடி இழப்பீடு விடுவிக்கப்பட்டுள்ளது.

நுண்ணீர் பாசனம்: வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறைகளின் கீழ் 2025-26 ஆம் ஆண்டிற்கு முறையே ரூ.276.61 இலட்சம் மற்றும் ரூ.619 இலட்சம் மதிப்பிலான இலக்குகள் பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

இயந்திரமயமாக்கல்: சூரியசக்தியால் இயங்கும் பம்புசெட்டுகள், சூரியசக்தி கூடார உலர்த்திகள் மற்றும் வேளாண் கருவிகள் விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்பட்டுள்ளன.

விதைகள் மற்றும் உரங்கள்: வேளாண் விரிவாக்க மையங்களில் நெல், உளுந்து உள்ளிட்ட விதைகள் இருப்பு உள்ளன. மாவட்டத்தில் தற்போது 3,225 மெ.டன் யூரியா மற்றும் 1,898 மெ.டன் டி.ஏ.பி உள்ளிட்ட உரங்கள் இருப்பில் உள்ளன.

பயிர் கடன்: 01.04.2025 முதல் 16.02.2026 வரை 24,333 விவசாயிகளுக்கு ரூ.283.16 கோடி பயிர் கடன் வழங்கப்பட்டுள்ளது. இதில் 17,398 சிறு மற்றும் குறு விவசாயிகள் பயன் பெற்றுள்ளனர். இந்தக் கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர், மாவட்ட வன அலுவலர் மற்றும் பல்வேறு அரசுத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



# த.வெ.க.சார்பில் பள்ளத்தூர் சாக்கோட்டையில் ஒன்றிய செயற்குழு கூட்டம்

தமிழக வெற்றிக் கழகம் - சிவகங்கை வடக்கு மாவட்டம்,சாக்கோட்டை மேற்கு ஒன்றியம் சார்பில், பள்ளத்தூர் சரவணா மஹாலில், ஒன்றிய கழக செயலாளர் க.சரத்பாலமுருகன் தலைமையில் ஒன்றிய செயற்குழு கூட்டம் மற்றும் எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. சிறப்பு அழைப்பாளராக மாவட்ட கழக செயலாளர் ஜோசப் தங்கராஜ் கலந்து கொண்டு,

நலத்திட்ட உதவிகளை வழங்கினார். பள்ளத்தூர் பேரூர் கழக செயலாளர் ரா. பாலமுருகன் முன்னிலை வகித்தார்.

மாவட்ட மாணவரணி செயலாளர் ர. ரஞ்சித் குமார் வரவேற்புரை ஆற்றினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய இணை செயலாளர் மணிகண்டன் வேம்பு, காணாடுக்கத்தான் பேரூர் செயலாளர் செல்வம், கோட்டையூர் பேரூர் செயலாளர் சீனிவாசன்,

செட்டிநாடு கிளை செயலாளர் சிவசுப்பிரமணியன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியின் முடிவில் கலந்து கொண்ட அனைவருக்கும் அறுசுவை உணவு வழங்கப்பட்டது.

# சரக்கு வாகனமாக ஆட்டோ பயன்படுத்தினால் பறிமுதல்!



ஆட்டோ மற்றும் இருசக்கர வாகனங்களை சரக்கு வாகனங்களாக பயன்படுத்தினால் பறிமுதல் செய்யப்படும் என போக்குவரத்து ஆணையர் கிரண் குராலா உத்தரவிட்டார். ரேபிடோ,ஊபர்,போர்ட்டர் செயலிகள் மூலம் சரக்கு ஏற்றிச் செல்லப்படுவதாக கிடைத்த புகாரைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை அறிவிக்கப்பட்டது. வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் திடீர் சோதனை நடத்தி, சம்பந்தப்பட்ட செயலிகள் வாயிலாக இயக்கப்படும் வாகனங்களை பறிமுதல் செய்ய வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது. பறிமுதல் விவரங்களை ஆணையரகத்திற்கு தெரிவிக்கவும் கூறப்பட்டுள்ளது.

மேலும், ஆட்டோ மற்றும் இருசக்கர வாகனங்களில் சரக்குகளை எடுத்துச் செல்ல பதிவு செய்யும் வசதியை நீக்க வேண்டும் என நிறுவனங்களுக்கும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

# மதுராந்தகம் தெற்கு ஒன்றியம் பாக்கம் ஊராட்சியில் பா.ஜ.க. சார்பில் தெருமுனைக்கூட்டம்



செங்கல்பட்டு தெற்கு மாவட்டம் மதுராந்தகம் தெற்கு ஒன்றியத்தில் உள்ள பாக்கம் ஊராட்சியில் மாவட்ட தலைவர் திரு M.பிரவீன் குமார் அவர்களின் ஆலோசனை படி ஒன்றிய பொதுச் செயலாளர் G. ராஜா மலர் ஏற்பாட்டில் பாரதிய ஜனதா கட்சியினர் நாளை நமதே தமிழ்நாடு நமதே. பாக்கம் சக்தி கேந்திரம் சார்பில் தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம் பாஜக ஒன்றிய தலைவர் பி.மோகன்குமார் தலைமையில் நடைபெற்றது எதிர்வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் திமுக அரசின் மக்கள் விரோதப் போக்கை பொதுமக்களிடம் எடுத்துக் கூறி அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடியார் அவர்களை ஆட்சி கட்டிலில் அமர வைக்க அயராது பாடுபடுவோம் என்று உருது மொழி ஏற்றுக்கொண்டனர் இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக மாவட்ட பொருளாளர் J.பாலாஜி, மாவட்ட செயலாளர் R. மதூர் முருகன். மாநில செயலாளர் E. K.தினகரன் (NGO பிரிவு), மாவட்ட சிறுபான்மை பிரிவு தலைவர் குமார், முன்னாள் மாவட்ட பட்டியலின தலைவர். ரவிச்சந்திரன், ஒன்றிய பொதுச் செயலாளர் சுரேஷ், ஓ பி சி அணி மாவட்ட துணை தலைவர் பாபு, ஒன்றிய துணை தலைவர் கோகுல கிருஷ்ண தாஸ், மாநில மகளிர் அணி செயற்குழு உறுப்பினர் கலைச்செல்வி, அமைப்புசாரா அணி மாவட்ட செயலாளர் ரகு, அதிமுக ஒன்றிய கவுன்சிலர் மாசி, மாநில பொதுக்குழு உறுப்பினர் கிருபாநிதி மற்றும் புரட்சி பாரதம் மாவட்ட செயலாளர் அதே சேகர் , உள்ளிட்ட நிர்வாகிகள் பொதுமக்கள் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்



கன்னியாகுமரி திங்கள்சந்தை அருகே உள்ள மாங்குழி குளத்தின் கரையில் சுற்றி திரிந்த 10 கிலோ எடை கொண்ட மலைபாம்பை தீயணைப்பு வீரர்கள் பிடித்து அடர்ந்த காட்டில் கொண்டு விட்டனர்.

# குளச்சலில் சூறைக்காற்றால் மீன்பிடித்தொழில் மந்தம்; கேரை மீன் கிடைக்காததால் மீனவர்கள் வேதனை

குமரி மாவட்டம் குளச்சல் ஆழ்கடல் பகுதியில் வீசும் சூறைக்காற்று காரணமாக,மீன்பிடிக்கச்சென்ற விசைப்படகுகள் பாதியிலேயே கரை திரும்பின. எதிர்பார்த்த அளவு கேரை மீன்கள் கிடைக்காததால் மீனவர்கள் பெரும் நஷ்டத்தைச் சந்தித்துள்ளனர்.



குளச்சல் மீன்பிடித் துறைமுகத்தைத் தங்குதளமாகக் கொண்டு 300-க்கும் மேற்பட்ட விசைப்படகுகளும், 1000-க்கும் மேற்பட்ட வள்ளம் மற்றும் கட்டுமரங்களும் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றன.

பொதுவாக, ஆழ்கடலுக்குச் செல்லும் விசைப்படகுகள் சுமார் 10 நாட்கள் வரை கடலிலேயே தங்கி மீன்பிடிப்பது வழக்கம். இந்த ஆழ்கடல் பகுதியில்தான் கேரை, சுறா, கணவாய், இறால், புல்லன் போன்ற உயர்ரக மீன்கள் கிடைக்கும்.

தற்போது குளச்சல் பகுதியில் 'கேரை' மீன்களுக்கான சீசன் காலமாகும். ஆனால், கடந்த சில நாட்களாகக் கடலில் வீசும் பலத்த சூறைக்காற்று காரணமாக மீன்பிடித் தொழில் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால்,ஆழ்கடலுக்குச் சென்ற பெரும்பாலான விசைப்படகுகள் மீன்பிடிக்க முடியாமல் பாதியிலேயே கரை திரும்பி, துறைமுகத்தில் நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டுள்ளன.

நேற்று காலை நிலவரப்படி, மீன்பிடிக்கச் சென்றவற்றில் இரண்டு விசைப்படகுகள் மட்டுமே கரை திரும்பின. அவற்றிலும் மிகக் குறைந்த அளவிலேயே கேரை மீன்கள் கிடைத்தன. பிடித்து வரப்பட்ட மீன்களை மீனவர்கள் ஏலக்கூடத்தில் வைத்து விற்பனை செய்தனர்.

இதுகுறித்து விசைப்படகு மீனவர்கள் கவலை தெரிவிக்கையில், "தற்போது கேரை மீன் சீசனாக இருந்தாலும், மீன்கள் வரத்து மிகவும் குறைவாகவே உள்ளது. ஆழ்கடலில் காற்று பலமாக வீசுவதால் தொடர்ந்து மீன்பிடிக்க முடியவில்லை. கிடைத்த சொற்ப மீன்களை விற்று வரும் பணம், படகிற்குச் செலவிடப்பட்ட டீசல் காசைக் கூட ஈடுகட்டவில்லை," என்று வேதனையுடன் தெரிவித்தனர்.

போதிய மீன்கள் கிடைக்காததால், குளச்சல் பகுதியில் மீன்பிடித் தொழில் தற்போது மிகவும் மந்தமடைந்துள்ளது.

# வெயில் தாக்கத்தால் மயங்கி விழுந்த யானை



ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் புலிகள் காப்பக வனப் பகுதியில் ஏராளமான காட்டு யானைகள் நடமாடுகின்றன. இரவு நேரத்தில் வனப் பகுதியில் இருந்து வெளியேறும் யானைகள் ஊருக்குள் நுழைந்து விவசாயிகள் பயிரிட்டுள்ள வாழை, கரும்பு, மக்காச்சோளம் உள்ளிட்ட பயிர்களை சேதப்படுத்தும் நிகழ்வு கள் தொடர்ச்சியாக நடந்து வருகின்றன.

இந்த நிலையில், தாளவாடி மலைப் பகுதியில் உள்ள முதியனூர் கிராமத்தில், விவசாயி குருசாமி என்பவரது தோட்டத்திற்குள் சுமார் 25 வயது மதிக்கத்தக்க பெண் யானை நுழைந்துள்ளது. அதன் பின்னர் அந்த யானை திடீரென உடல் நலக் குறைவு மயக்கம் ஏற்பட்டு தரையில் படுத்துக் கொண்டது. வெயில் தாக்கத்தால் உடல் சோர்வடைந்த நிலையில்,எழுந்திருக்க பலமுறை முயற்சித்தும் அதனால் முடியவில்லை.

இதனால் அதே இடத்தில் சுருண்டு படுத்துக் கொண்டிருந்தது.

# தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலையை மீண்டும் திறக்க முதல்வர் அனுமதிக்க மாட்டார் மதிமுக முதன்மை நிலையச்செயலாளர் துரை வைகோ எம்.பி. பேட்டி



தூத்துக்குடி பெரியசாமி நகர் பகுதியை சேர்ந்த இளைஞர்கள் மியான்மரில் சிக்கி தவித்த போது அவர்களை மீட்க மத்திய அரசிடம் கூறி நடவடிக்கை எடுத்தார் இதைத்தொடர்ந்து இன்று தூத்துக்குடிக்கு வருகை தந்த துரைவைகோ எம்பி பெரியசாமி நகர் பகுதிக்கு வருகை தந்து பாதிக்கப்பட்ட அந்த குடும்பத்தினர் மற்றும் அந்த பகுதி பொதுமக்களை சந்தித்து அவரது குறைகளை கேட்டு ஆறுதல் கூறினார் மியான்மரில் சிக்கி தவித்த இளைஞர்களை குவிக்க நடவடிக்கை அளித்த துறை வைகோ எம்பிக்கி பெரியசாமி நகர் பகுதி மக்கள் சார்பில் மாலை அணிவித்து ஆரத்தி எடுத்து வாழ்த்து தெரிவித்தனர்.

இதைத்தொடர்ந்து துரை வைகோ எம்பி செய்தியாளர்களை சந்தித்தார் அப்போது அவர் பேசுகையில்:

தூத்துக்குடி அருகே முத்தையாபுரம் பகுதியில் கப்பல் கட்டும் தளம் அமைக்க எடுக்கப்படும் நடவடிக்கைக்கு எதிராக சிறிய உப்பு உற்பத்தியாளர்கள் கோரிக்கை மனு அளித்துள்ளார்கள் இது குறித்து முறையாக ஆய்வு செய்த பின்பு இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினர் கனிமொழி எம்பி ஆகியோரிடம் பேசி இதை வராமல் தடுப்பதற்கான நடவடிக்கையில் எடுக்கப்படும் உட்பட தொழிலில் அடித்தட்டு மக்கள் ஈடுபட்டு வருகிறார்கள் அவர்களை பாதிக்கும் வகையில் எந்த திட்டமும் செயல்படுத்தக் கூடாது அந்த நம்பிக்கை எனக்கு இருக்கிறது

பாராளுமன்ற உறுப்பினர் கனிமொழி இதற்குரிய உரிய நடவடிக்கையை எடுப்பார்

மக்கள் சார்பாக திட்டங்களை செயல்படுத்துவதனாலே மக்களுக்கு உண்டான ஒரு நம்பிக்கை உருவாக்கக்கூடிய அந்த திட்டங்களை செயல்படுத்தியனால்-தான் இந்த வெற்றி இப்போது தமிழக அரசு உங்களுக்கு ஒரு பக்கம் நீதியின் அடிப்படையில ஏழை எளிய மக்களுக்கு அவங்க பயனடைகிற மாதிரி பல திட்டங்கள் நீங்க புதுமைப்பெண் ஏழை குடும்பங்கள் உடைய மாணவ மாணவிகள் வந்து பயன்பெறுகிற புதுமை பெண் தமிழ் புதல்வன் திட்டங்கள் அதே மாதிரி உங்களுக்கு மக்களை தேடி மருத்துவம் கலைஞர் மகளிர் உரிமைத் தொகையாக இருக்கட்டும் இதுபோன்ற சமூகநீதி அடிப்படையில் ஏழை எளிய மக்கள் பயனடைய கூடிய சில திட்டங்கள் அது ஒரு பக்கம் இருந்தாலும் முன்னேற்ற அரசியல் தொழிற்சாலைகள் தமிழ்நாடு வரதுக்கு உண்டான சூழல் தமிழக அரசு எடுத்திருக்கிறார்கள் அந்த மாநாட்டில் வந்து தரவுகளுடன் கிட்டத்தட்ட ஆயிரத்திற்கும் மேற்பட்ட கையெழுத்து போட்டு இருக்கிறார்கள் 75% ஒப்பந்தங்கள் 800க்கும் மேற்பட்டவை இன்னைக்கு செயல்பாட்டுக்கு செயற்பாட்டு வரக்கூடிய சூழ்நிலை அதுல 35% திறக்கப்பட்டுள்ளது வேலைக்கு செல்ல ஆரம்பித்து விட்டார்கள் அவங்க 30 லட்சத்துக்கு மேற்பட்ட வேலை வாய்ப்பு உருவாக்கி உள்ளதாக கூறியிருந்தார்கள் ஒன்றிய அரசை சார்ந்த இபிஎப் எம்பிளாயிஸ் அண்ட் ஆர்கனைசேஷன் அவங்களுடைய தரவுகள் அடிப்படையில் கடந்த நான்கரை வருடங்களில் கிட்டத்தட்ட 29 லட்சம் வேலை புதிய வேலைவாய்ப்பு உருவாகியுள்ளதாக அவங்க சொல்லி இருக்கிறார்கள்

மக்கள் திட்டங்கள் மற்றும் வேலை வாய்ப்பு ஆகியவற்றை செய்துள்ளோம் இதனால் மக்கள் எங்களுக்கு வாக்களிப்பார்கள் என்ற நம்பிக்கையுடன் இருக்கிறோம்

முன்னாள் நீதிபதி தலைமையிலான குழு அமைத்து ஒன்றிய மாநில அரசு இடையேயான உறவு எப்படி இருக்க வேண்டும் கூட்டாட்சி தத்துவம் எப்படி இருக்க வேண்டும் என்பது தொடர்பான அறிக்கை கேட்டிருந்தார்கள் முதல்வர் அதில் தொடர்பாக கூறியுள்ளார்

15 சதவீத வாக்கு என்பது என்னுடைய கருத்து சகோதரர் விஜயினுடைய வருகை திமுக கூட்டணி என்பது வலுவான கூட்டணி நடந்து முடிந்த உள்ளாட்சி சட்டமன்றம் நாடாளுமன்ற தேர்தலில் அமோகமான வெற்றியை பெற்றுள்ளோம் நாங்கள் மக்களை நம்பி உள்ளோம் சகோதரர் விஜய் வாங்க கூடிய 15 செய்த வாக்குகள் யாரை பாதிக்கும் என்றால் ஆட்சிக்கு எதிரான மனநிலை ஒருபுறம் இருந்தாலும் இந்த வாக்குகள் பிளவு படும் போது எங்களுடைய வெற்றி எளிதாகும்

எங்களுடைய கட்சி தோழர்கள் தொண்டர்களுடைய விருப்பம் என்னவென்றால் எங்கள் கட்சி அங்கீகாரம் பெற வேண்டும் 8 சீட்டுகள் பெற வேண்டும் 8 சீட்டுகள் வெற்றி பெற்றால் தான் ஒரு கட்சிக்கு அங்கீகாரம் கிடைக்கும் ஆனால் இன்றைக்கு உள்ள சூழ்நிலையில் புதிய இயக்கங்கள் கூட்டணிக்கு வந்துள்ளனர் ஏற்கனவே இருக்கக்கூடிய இயக்கங்களுக்கு அவர்களுக்கு கேட்ட தொகுதிகள் கொடுக்க வேண்டிய சூழ்நிலை பல்வேறு நெருக்கடிகள் திமுக கூட்டணிக்கு தலைமைக்கு முதலமைச்சருக்கு உள்ளது எனவே கூட்டணி தலைமை முதலமைச்சர் பேசி சுமுகமாக ஒரு முடிவுக்கு வருவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது

கூட்டணி ஆட்சி என்பது எல்லாம் எங்களுக்கு கிடையாது நாங்கள் எந்த நோக்கத்திற்கு இந்த கூட்டணிக்கு வந்தோமோ அந்த இதைத் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறோம் எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் இந்த கூட்டணிக்கு ஆதரவு வழங்கி வருகிறோம் கண்டிப்பாக எங்கள் கூட்டணி இந்த தேர்தலில் மிகப்பெரிய வெற்றிய பெறும் என்று நம்பிக்கை உள்ளது

தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலை வருவதற்கு மதிமுக தலைவர் வைகோ தொடர்ந்து தனது எதிர்ப்பை தெரிவிப்பார் பசுமை ஆலை என்ற பெயரில் ஸ்டெர்லைட் தூத்துக்குடியில் நுழைவதை எதிர்த்து மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து போராடும் என்று அவர் தெரிவித்தார்.



## தொளசம்பட்டி மாரியம்மன் ஆலயத்தில் கும்பாபிஷேக விழா; ஆயிரக்கணக்கான பக்தர்கள் சுவாமி தரிசனம்

சேலம் மாவட்டம் தொளசம்பட்டியில் எழுந்தருளியுள்ள அருள்மிகு ஸ்ரீ செல்வ விநாயகர் ஸ்ரீ பெரிய மாரியம்மன் ஸ்ரீ சின்ன மாரியம்மன் மற்றும் ஸ்ரீ கோட்டை மாரியம்மன் ஆலயத்தில் மஷா கும்பாபிஷேக விழாவை முன்னிட்டு 16/2/26 திங்கட்கிழமை கிராம சாந்தி நிகழ்ச்சியுடன் தொடங்கப்பட்ட ,19/2/26 ஸ்ரீ விநாயகர்வழிபாடுமஷா கணபதி ஓமம் நவகிரக ஓமம் லட்சுமி ஓமம் செய்து சக்தி நகரில் இருந்து முத்தங்காடு தீர்த்த குடம் எடுத்து வரும் பூஜை நடைபெற்றது புதிய சிலைகளுக்கு அபிஷேகம் கண் திறப்பு பூஜைபோன்றவைநடைபெற்றது இதனைத் தொடர்ந்து சுற்றுவட்டார பகுதியில் உள்ள திரளான பக்தர்கள் கலந்து கொண்டு தீர்த்த குடம் எடுத்தனர் . புனித தீர்த்தங்களை கலசங்களில் வைத்து சிறப்பு பூஜை நடைபெற்றது இன்று காலை பக்தர்களுக்கு புனிததீர்த்தங்கள்வழங்கப்பட்டது . இதனை தொடர்ந்து சுற்றுவட்டார பகுதியில் உள்ள திரளான பக்ககோடிகள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர் பக்தர்களுக்கு காலை முதல் மாலை வரை சிறப்பான அன்னதானம் வழங்கப்பட்டது.

## நல்லூர் வடக்கு ஒன்றிய அதிமுக ஆலோசனைக்கூட்டம்: 2026 தேர்தல் குறித்து நிர்வாகிகளுக்கு அறிவுரை



கடலூர் மாவட்டம் வேப்பூர் லேனா திருமண மண்டபத்தில், நல்லூர் வடக்கு ஒன்றிய அதிமுக செயல்வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் ஆலோசனைக் கூட்டம் (பிப். 19) வியாழக்கிழமை நடைபெற்றது.

நல்லூர் வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் TM. பச்சமுத்து தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு, ஒன்றிய அவைத்தலைவர் முருகேசன் வரவேற்புரையாற்றினார். மாவட்ட அவைத் தலைவர் பிகே. தங்கராசன் முன்னிலை வகித்தார். சிறப்பு அழைப்பாளர்களாக மாவட்ட அம்மா பேரவை செயலாளர் உமாமகேசுவரன், மாவட்ட துணை செயலாளர் ரவிச்சந்திரன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர். அப்போது, மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின்பிறந்தநாளைச் சிறப்பாகக் கொண்டாடுவது குறித்தும், வரும் 24-ஆம் தேதி சேத்தியாத்தோப்பில் நடைபெறவுள்ள கட்சி விழாவில் திரளாகப் பங்கேற்று சிறப்பிப்பது குறித்தும் ஆலோசனைகள் வழங்கப்பட்டன. மேலும், எதிர்வரும் 2026 சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில்,பூத்கமிட்டி அமைத்தல் மற்றும் களப்பணிகளைத் தீவிரப்படுத்துவது குறித்து நிர்வாகிகளுக்கு விரிவான அறிவுரைகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் நல்லூர் டாக்டர் சம்பத், குமரேசன், முருகன், வேப்பூர் வழக்கறிஞர் குமரேசன், சேப்பாக்கம் கார்த்திக் மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, கிளை அளவிலான முக்கிய பொறுப்பாளர்கள், சார்பு அணிகளின்அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் என நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.



### வேற்றுகிரகவாசிகள் பற்றிய ரகசிய கோப்புகளை வெளியிட டிரம்ப் உத்தரவு!

வேற்றுக்கிரகவாசிகள் உள்ளனரா, இல்லையா என உலகம் முழுவதும் பல ஆண்டுகளாக விவாதிக்கப்பட்டு வருகிறது. அமெரிக்க ஆய்வாளா்கள் வேற்றுக்கிரகவாசிகளைப் பிடித்து வந்து, அந்நாட்டின் நெவாடா பகுதியில் உள்ள ரகசியமான இடமான 'ஏரியா 51'-இல் வைத்து ஆய்வு செய்து வருவதாகவும் அவ்வப்போது தகவல் வெளியாகி வருகிறது. இதை அமெரிக்கா இதுவரை உறுதி செய்யவில்லை. சமீபத்தில் அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ஒபாமா, யூடியூபா் ஒருவருக்கு அளித்த பேட்டியின்போது, வேற்றுக்கிரகவாசிகள் இருப்பது உண்மைதான், ஆனால் நான் இதுவரை பாா்த்ததில்லை என்றார். அதீத ஆர்வத்தை தொடர்ந்து வேற்றுகிரகவாசிகள், வேற்றுகிரக வாழ்க்கை, அடையாளம் காணப்படாத வான்வழி நிகழ்வுகள் மற்றும் அடையாளம் காணப்படாத பறக்கும் விமானங்கள் தொடர்பான அரசின் ரகசிய கோப்புகளை அடையாளம் கண்டு, பொதுமக்களின் பார்வைக்கு வெளியிட உத்தரவிட்டுள்ளேன்" எனத் தெரிவித்துள்ளார்.

## திமுக, காங்கிரஸ் கூட்டணி நிலைத்திருக்கும்; மாற்றத்திற்கு வாய்ப்பு இல்லை: தூத்துக்குடியில் கனிமொழி எம்.பி. பேட்டி



தூத்துக்குடி வாகைகுளம் விமான நிலையத்தில் திமுக துணைப் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற திமுக குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி செய்தியாளர்களைச் சந்தித்தார்.

இடைக்கால பட்ஜெட்டில் எதிர்காலத் திட்டங்கள் எதுவுமில்லை எனக் கூறி பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் சட்டமன்றத்திலிருந்து வெளிநடப்பு செய்தது குறித்த கேள்விக்கு, பொதுவாக இடைக்கால பட்ஜெட்டில் பெரிய அறிவிப்புகளும் வருவதில்லை. இருப்பினும்,அவர்அதை முறையாகப் படித்துப் பார்த்தால், இளைஞர்களின்எதிர்காலத்தேவைகள், விளையாட்டு துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளுக்குத் தேவையான முக்கிய அம்சங்கள் அதில் இடம்பெற்றுள்ளன. வெளிநடப்பு செய்ய வேண்டும் என்ற நோக்கில் ஏதாவது ஒரு அரசியல் நாடகத்தை அரங்கேற்றுவது சரியானதாக இருக்காது.

திமுக - காங்கிரஸ் கூட்டணியில் பிளவு ஏற்பட்டுள்ளதாக பாஜக கூறி வருவது குறித்த கேள்விக்கு, பாஜக தனது கூட்டணியைச் சரியாக வைத்துக் கொண்டாலே போதும்; அவர்கள் ஏன் மற்ற கூட்டணிகளைப் பற்றிக் கவலைப்படுகிறார்கள் எனத் தெரியவில்லை.

திமுக - காங்கிரஸ் கூட்டணி பல ஆண்டுகளாக பலமாக நிலைத்திருக்கும் ஒரு கூட்டணி. இதில் எந்தவித மாற்றமும் வருவதற்கு வாய்ப்பே இல்லை.

மாநிலத்தையே கொண்டு போய் அடகு வைத்தவர் தான் எதிர்க்கட்சித் தலைவர். இன்னைக்கு நேற்று அல்ல; திமுகவின் அடிப்படை கொள்கையே 'மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி' என்பதே. ஒருவேளை அவருக்கு இது தெரியாமல் இருக்கலாம் என்று விமர்சித்தார்.



கன்னியாகுமரி மாவட்ட எல்லையை ஒட்டிய கேரள மாநிலத்தின் பாறசாலை பகுதியில் திடீரென வானத்தை நோக்கி உயர்ந்து சுழன்ற தூசுச் சுழல் பொதுமக்களை அச்சத்தில் ஆழ்த்தியது. பிற்பகல் நேரத்தில் ஏற்பட்ட இந்த இயற்கை நிகழ்வு சில நிமிடங்கள் நீடித்து, சுற்றியிருந்த தூசி மற்றும் இலைகளை மேலே தூக்கி வீசியது. வானில் சுழன்றுஎழுந்தகாட்சிபலரையும்பதற்றமடையச்செய்தது. எனினும், பெரும் சேதம் எதுவும் ஏற்படவில்லை என தகவல் கிடைத்துள்ளது.



நாகர்கோவில் பீச் ரோடு சந்திப்பில் தினமும் ஆயிரக்கணக்கான வாகனங்கள் மற்றும் பொதுமக்கள் பள்ளிக் குழந்தைகள் செல்லும் சாலையில். கழிவு நீர் நிரம்பி சாலை வழியாக செல்வதால் தொற்றுநோய் ஏற்படும்அபாயமும்சுகாதாரசீர்கெடும்ஏற்படும்சூழ்நிலை உள்ளதால் மாவட்ட நிர்வாகம் உடனடியாக நடவடிக்கை எடுத்து அப்பகுதியை சரி செய்ய வேண்டும் என்று அகில இந்தியமக்கள்நலக்கழகத்தின்மாநிலதுணைத்தலைவரும் மாவட்ட தலைவருமான வழக்கறிஞர் சதீஷ் மாவட்ட நிர்வாகத்திற்கு கோரிக்கை வைத்தார். இல்லையென்றால் பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்களுடன் இணைந்து போராட்டம் நடத்தப்படும் என தெரிவித்தார்



ஈரோடு மாவட்டம் தாளவாடி காவல் நிலைய ஆய்வாளர் ஆனந்தன், ஈரோடு சைபர் கிரைம் காவல் நிலையத்திற்கு மாற்றப்பட்டார். அவருக்கு பதிலாக புதிய ஆய்வாளராக ராதாகிருஷ்ணன் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் முன்பு திருப்பூர் மாவட்டம் பெருமாநல்லூர் ஸ்டேஷனில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தார்.புதிய பதவியை ஏற்றுக் கொண்ட ராதாகிருஷ்ணனுக்கு சக காவலர்கள் மற்றும் முக்கிய நிர்வாகிகள் நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர்.



## மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் தலைமையில் உலகத் தாய்மொழிநாள் உறுதிமொழி ஏற்பு

கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர். ஸ்டாலின் தலைமையில், மாவட்ட காவல் அலுவலகத்தில் உலகத் தாய்மொழி நாள் உறுதிமொழி ஏற்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில்

காவல் அதிகாரிகள், காவலர்கள் மற்றும் அமைச்சுப்பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

உறுதிமொழி

எங்கும் தமிழ் எதிலும் தமிழ் எப்போதும் தமிழ் என்ற நடைமுறையைக் கொண்டுவரப் பாடுபடுவோம். தேமதுர தமிழோசை உலகெங்கும் ஒழிக்க எந்நாளும் உழைத்திடுவோம். அனைத்து ஆவணங்களிலும் தமிழிலேயே கையொப்பமிடுவோம்.

குழந்தைகளுக்கு தமிழ் மொழியில் பெயர் சூட்ட பரப்புரை செய்திடுவோம். இணையற்ற தமிழுடன் இணையத் தமிழையும் காத்து வளர்ப்போம் என்று உலகத் தமிழ்மொழி நாளான உளமாற உறுதி கூறினார்.



ஈரோடு மாவட்டகாவல் நிலையங்களில்தனது செல்போன் தொலைந்தது சம்பந்தமாக மனுதாரர்கள் கொடுத்த புகாரின் பேரில் ஈரோடு மாவட்ட அனைத்து காவல் நிலையங்களிலும் CEIR PORTAL மூலம் தொலைந்த செல்போன்களின் IMEI வைத்து, செல்போன்களை கண்டுபிடிக்கப்பட்டு வருகிறது. 19.02.2026 ஆம் தேதி அன்று ரூ.1,96,997/ மதிப்புள்ள காணாமல் போன 13 செல்போன்களை மீட்கப்பட்டு சம்பந்தப்பட்டவர்களிடம் ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அ.சுஜாதா, ஈரோடு மாவட்டகாவல் அலுவலகத்தில் வைத்து ஒப்படைத்தார். இதுவரை CEIR Portal மூலம் 1185 செல்போன்கள் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும் பொதுமக்கள் தங்களது செல்போன் காணாமல் போனால் காவல் நிலையங்களுக்கு செல்லாமலேயே CEIR Portal இணையதளத்தில் புகார் செய்யலாம் .

### ஈரோடு மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி

## விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகளிடமிருந்து 65 கோரிக்கை மனுக்களைப்பெற்று குறைகளைக்கேட்டறிந்தார்



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட ரங்கில், விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி

தலைமையில் நேற்று (20.02.2026) நடைபெற்றது.

இக்கூட்டத்தில்மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது,

ஈரோடு மாவட்டத்தின் இயல்பான ஆண்டு சராசரி மழையளவு 797.95 மிமீ ஆகும். நடப்பு ஆண்டில் 20.02.2026 முடிய 18.06 மி.மீ பெய்துள்ளது. பவானிசாகர் அணையின் நீர்மட்டம் தற்போது 86.59 அடியாகவும், 19.44 மி.கன அடிநீர் இருப்பும் உள்ளது. நடப்பாண்டில் வேளாண்மை விரிவாக்க மையங்களில் விநியோகம் செய்வதற்காக நெல் விதைகள் 38.1 மெட்ரிக் டன், சிறுதானியங்கள் 10.3 மெட்ரிக் டன், பயறுவகைகள் 31.2 மெட்ரிக்டன்.எண்ணெய் வித்துக்கள் 36.3 மெட்ரிக் டன் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. இரசாயன உரங்களான யூரியா 4629 மெட்ரிக் டன், டி.ஏ.பி 3421 மெட்ரிக் டன், பொட்டாஷ் 3384 மெட்ரிக் டன் மற்றும் காம்ப்ளக்ஸ் 9226 மெட்ரிக் டன் இருப்பில் உள்ளது. மேலும், உர விற்பனையாளர்கள் மானிய உரங்களை விவசாயம் அல்லாதபிறபயன்பாட்டுக்கு விற்பனை செய்தால் அவர்களது உரிமம் ரத்து செய்யப்படும். விவசாயிகள் கேட்கும் உரங்களை மட்டுமே வழங்க வேண்டும் பிற உரங்களை வாங்க கட்டாயப்படுத்தக் கூடாது. உர விற்பனை முனையத்தின் மூலம் மட்டுமே உரங்கள் பட்டியலிடப்பட வேண்டும்.

பி.எம்.கிசான் பயனாளிகள் வரும் காலங்களில் தொடர்ந்து தொகை பெற தனித்துவ விவசாய அடையாள எண் அவசியம் என மத்திய அரசு உறுதியாகதெரிவித்துள்ளது. விவசாயிகள் தங்கள் பகுதி வேளாண் மற்றும் தோட்டக்கலை அலுவலர்களை தொடர்பு கொண்டோ அல்லது பொது சேவை மையத்தின் மூலமாகவோ தங்களது ஆதார் எண், சிட்டா, ஆதாருடன் இணைக்கப்பட்டுள்ள தொலைபேசி எண்ணுடன் சென்று உடனடியாக பதிவு செய்து தனித்துவ விவசாய அடையாள எண் பெறலாம். எனவே, பி.எம். கிசான் தவணை தொகை தொடர்ந்து கிடைத்திட இதுநாள் வரை தனித்துவ விவசாய அடையாள எண் பெறாத பயனாளிகள் தங்கள் வட்டார வேளாண் மற்றும் தோட்டக்கலைத்துறை அலுவலகத்தை தொடர்பு கொண்டு தனித்துவ அடையாள எண் பெறுவதற்கு பதிவு செய்ய வேண்டுமென தெரிவித்தார்.



ஈரோடு மாவட்டம் சென்னிமலை தெற்கு ஒன்றிய பாரதிய ஜனதா கட்சி சார்பில், பேருந்து நிலையம் முன்பாகத் தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றது. ஒன்றியத் தலைவர் சுந்தர்ராசு தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், திருப்பூர் தெற்கு மாவட்டத் தலைவர் த.மோகனப்பிரியா சரவணன் சிறப்புரையாற்றினார். மாவட்டச் செயலாளர்கள்ஞானவேல், சாய்பூரணிமற்றும்அதிமுகஒன்றியநிர்வாகிகள்உள்ளிட்டோர் கலந்துகொண்டு உரையாற்றினர்.



ஈரோடு மாவட்டம் பெருந்துறை புதிய பேருந்து நிலையம் அருகே அமைந்துள்ளது மிகப் பழமையான அருள்மிகு சோளீஸ்வரர் திருக்கோயில் உள்ளது. இத்திருக்கோவிலில் பல்வேறு திருப்பணிகள் நிறைவு பெற்று ஆலய கும்பாபிஷேக விழா வருகிற மார்ச் 25 புதன் கிழமை காலை சிறப்பாக நடைபெற உள்ளது. அதற்கான யாகசாலை அமைக்கும் பணிக்கான பூமி பூஜை நேற்று வெள்ளிக்கிழமை காலை ஆலய வளாகத்தில் நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

## ஈரோடு மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி

# நெடுஞ்சாலைத்துறையின் சார்பில் சோலார் மற்றும் பெருந்துறை பகுதியில் ரூ.120.5 கோடி மதிப்பீட்டில் 2 சாலை மேம்பாட்டு பணிகளை துவக்கி வைத்தார்





ஈரோடு மாநகராட்சி, சோலார்பேருந்து நிறுத்தம், மற்றும் பெருந்துறை ரவுண்டானா அருகில் நெடுஞ்சாலைத்துறையின் சார்பில் ரூ.120.5 கோடி மதிப்பீட்டில் 2 சாலை மேம்பாட்டு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (20.02.2026) துவக்கி வைத்தார்.

ஈரோடு மாவட்டத்தில் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில் பல்வேறு சாலைகள் அகலப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி, நேற்றையதினம்மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி ஈரோடு கரூர் சாலையை இருவழித்தடத்திலிருந்து நான்கு வழித்தடமாக அகலப்படுத்தும் பணி ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுத் திட்டம் 2026 –2 027–இன் கீழ் ரூ.55.00 கோடி மதிப்பீட்டில் சாலை விரிவாக்க பணிகளை துவக்கி வைத்தார். இச்சாலையானது, நான்கு வழிச்சாலையாக தரம் உயர்த்தப்பட்டால் ஈரோடு நகரப்பகுதியில் உள்ள போக்குவரத்து நெரிசல் மற்றும் பயணநேரம் வெகுவாக குறையும். மேலும், இச்சாலையானது ஈரோடு மற்றும் கரூர் மாவட்டங்களை இணைக்கும் முக்கிய சாலையாகவும் திகழ்கிறது. பெருந்துறை ரவுண்டானா அருகில், ஈரோடு காங்கேயம் சாலையை பெருந்துறை கடின புருவங்களுடன் இருவழித்தடத்திலிருந்து நான்கு கூடிய பணி வழித்தடமாக அகலப்படுத்தும் ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுத் திட்டம் 2026–2027–இன் கீழ் ரூ.65.50 கோடி மதிப்பீட்டில் சாலை விரிவாக்க பணிகளை துவங்கி வைத்தார். இச்சாலையானது நான்குவழிச்சாலையாக தரம் உயர்த்தப்பட்டால் பெருந்துறை நகரப்பகுதியில் உள்ள போக்குவரத்து நெரிசல் மற்றும் பயணநேரம் வெகுவாக குறையும். மேலும், இச்சாலையானது ஈரோடு, தாராபுரம் மற்றும் பழனி ஆகிய முக்கிய நகரங்ககளை இணைக்கும் முக்கிய சாலையாகும்.

இந்நிகழ்வில், ஈரோடு நெடுஞ்சாலைத்துறை கோட்டப்பொறியாளர் ஜெ.கு.ரமேஷ்கண்ணா, உதவி கோட்டப்பொறியாளர் ச.சரவணன், உதவி பொறியாளர் இரா. மோகனசக்தி, உட்பட துறைசார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## அச்சிறுப்பாக்கம் அருகே


# கிளியா நகர் ஊராட்சியில் பா.ஜ.க. தெருமுனைக்கூட்டம் செங்கை தெற்கு மாவட்ட செயலாளர் டாக்டர்.பிரவீன்குமார் பங்கேற்பு



செங்கல்பட்டு மாவட்டம் அச்சிறுப்பாக்கம் வடக்கு ஒன்றியத்தில் முதல் துவக்க நிகழ்ச்சியாக கிளியா நகர் கிராமத்தில் மண்டல் தலைவர் திரு ந. சண்முகம் அவர்கள் தலைமையில்சக்திகேந்திர பொறுப்பாளர் ஒன்றியத்தினுடைய பொருளாளர்

திருC.ராமதாஸ்அவர்களின் ஏற்ப்பாட்டில் செங்கல்பட்டு தெற்கு மாவட்டத்தின் தலைவர் திரு டாக்டர் M பிரவீன்குமார் அவர்கள் சிறப்புரையாற்றி திமுக அரசின் அவலத்தை மக்களிடம் சிறப்பான முறையில் எடுத்துரைத்து 2026 சட்டமன்ற தேர்தலில் NDA கூட்டணியின் வேட்பாளர்களுக்கு வாக்குகளை திரட்டினார் சட்டமன்றத்தின் சக்தி கேந்திரா பொறுப்பாளரும் செங்கல்பட்டு தெற்கு மாவட்ட செயலாளர்

திருRமுருகன்,மாவட்ட பொருளாளர் மற்றும் தொகுதி பொறுப்பாளருமான திரு அக்ரோ J பாலாஜி, மண்டல் பொதுச் செயலாளர் திரு G ,கிருஷ்ணமூர்த்தி மற்றும் திரு M முதுரைராஜ் இளைஞரணி மாவட்ட தலைவர் திரு N சந்தோஷ்குமார், தரவு மேலாண்மை பிரிவு மாவட்ட தலைவர் திரு K பிரபு, மண்டல் துணை தலைவர்கள், மண்டல் செயலாளர்கள், மண்டல் அணி மற்றும் பிரிவு நிர்வாகிகள், கிளைத் தலைவர்கள் திரு G மகேஷ், திரு கோவிந்தராஜன், திரு ஆறுமுகம் இவர்கள் முன்னிலையில் கிளியா நகர் கிராமத்தில் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு தெருமுனை கூட்டம் நிகழ்ச்சியை மிகச் சிறப்பாக சிறப்பித்தனர்



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி அன்று (18.02.2026) மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் கோபிசெட்டிபாளையம் சார்ஆட்சியர் S.சிவானந்தம் எழுதிய Executive Magistracy In India என்ற நூலை வெளியிட்டார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) தேன்மொழி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் முரளி ஆகியோர் உள்ளனர்.




ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி (19.02.2026) மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் சார்பில், இளம் நுகர்வோர்களுக்கு நுகர்வோர் பாதுகாப்புச்சட்டம் 2019 குறித்து புத்தாக்கப்பயிற்சியினை துவக்கி வைத்து பேசினார்.

## ஈரோடு மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி

# உலக தாய்மொழி நாள் உறுதிமொழியினை அனைத்துத்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஏற்றுக்கொண்டனர்



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் நேற்று (20.02.2026) மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் உலக தாய்மொழி நாள் உறுதிமொழியினை அனைத்துத்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஏற்றுக் கொண்டனர்.

தமிழ் வளர்ச்சித்துறையின் சார்பில் 2025–ம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் பிப்ரவரி 21 உலகத் தாய்மொழி நாளன்று அனைத்து அரசு அலுவலகங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் உலகத் தாய்மொழிநாள் உறுதிமொழியினை தவறாது எடுக்க வேண்டும் தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது. இவ்வாண்டு 21.02.2026 ஆம் நாள் சனிக்கிழமை விடுமுறை நாள் என்பதால் ஒரு நாள் முன்னதாகவே உறுதி தாய்மொழி நாள் உறுதிமொழியினை அனைத்துறை அலுவலர்களும் ஏற்றுக்கொண்டனர்.

அதன்படி, நேற்றைய தினம் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் உலக தாய்மொழி நாள் உறுதிமொழியான,

"எங்கும்தமிழ்எதிலும் தமிழ் எப்போதும் தமிழ் என்ற நடைமுறையைக் கொண்டுவரப் பாடுபடுவோம். தேமதுர தமிழோசை உலகெங்கும் ஒலிக்க எந்நாளும் உழைத்திடுவோம். அனைத்து ஆவணங்களிலும் தமிழிலேயே கையொப்பமிடுவோம். குழந்தைகளுக்கு தமிழ் மொழியில் பெயர் சூட்ட பரப்புரை செய்திடுவோம். இணையற்ற தமிழுடன் இணையத் தமிழையும் காத்து வளர்ப்போம் என்று உலகத் தாய்மொழி நாளான இன்று உளமார உறுதி கூறுகிறேன்" என்று அனைத்துறை அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உறுதிமொழியினைஏற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் வே.ஜோதி உட்பட அனைத்துத் துறைச்சார்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

# உளுந்தூர்பேட்டையில் தலைமைகாவலர் வீட்டின் பூட்டை உடைத்து பீரோவில் இருந்த 18 சவரன் தங்க நகைகள் கொள்ளை



கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை பாரிவள்ளல் தெருவை சேர்ந்தவர் மாரிமுத்து இவர் ஒய்வு பெற்ற சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் இவரது மகன் ராம்குமார் தற்பொழுது திருநாவலூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறார் இந்த நிலையில் கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்பு ராம்குமாரின் பெற்றோர்கள் அவரது மூத்த சகோதரிக்கு உடல்நல குறைவு ஏற்பட்டதால் அவரை பார்ப்பதற்காக செங்கல்பட்டு சென்றுள்ளனர் இந்த நிலையில் இன்று வெள்ளிக்கிழமை காலை ராம்குமாரின் வீட்டின் முன்பக்க கதவு கூட்டு உடைக்கப்பட்ட நிலையில் திறந்து கிடந்ததை பார்த்த அருகில் இருந்த வீட்டினர் உடனடியாக ராம்குமாரின் பெற்றோருக்குதகவல் தெரிவித்தனர் அதன்பேரில் ராம்குமாரின் இளையசகோதரி அந்த வீட்டிற்கு விரைந்து சென்று பார்த்த பொழுது வீட்டில் இருந்த 3 பீரோக்கள் ஏடைந்து கிடந்ததோடு அதில் இருந்த பொருட்கள் சிதைந்து கிடந்ததைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தார். இதுகுறித்த புகாரின் பேரில் கொள்ளை நடந்தவீட்டிற்குவிரைந்து சென்ற உளுந்தூர்பேட்டை காவல்துறையினர்.

இந்த கொள்ளை சம்பவம் குறித்து விசாரணை மேற்கொண்டனர் அப்பொழுது வீட்டின் முன்பக்க பூட்டை உடைத்து உள்ளே சென்ற மர்மன் அவர்கள் வீட்டின் பின்பக்க பூட்டை உடைத்து தப்பி சென்றதும் தெரிய வந்தது இதை எடுத்து கொள்ளை சம்பவம் நடந்த வீட்டில் தடைய அறிவியல் நிபுணர்கள் வரவழைக்கப்பட்டு தடயங்கள் சேகரிக்கப்பட்டு வருகிறது...

வீடுகள் நிறைந்த பகுதியில் நடந்த இந்த கொள்ளை சம்பவம் அந்த பகுதி மக்களிடையேபெரும்பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.